# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 032/மா/2017

ஆணை எண். 168/2017

நாள் : 19/06/2017

திரு எஸ். அழகுவேல்பிள்ளை,
சென்னை – 2. – முறையீட்டு மனுதாரர்

திரு ஆர். பாலமுத்துராமன்,
மாநகராட்சி பொறியாளர்,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, 819, அண்ணாசாலை, பஸ்ட் ஹோம் அப்ளையன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு S. அழகுவேல்பிள்ளை அவர்களின்22.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 22.02.2017 அன்று பெறப்பட்டு 32/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர், எதிர்மனுதாரரான சென்னை மாநகராட்சி உதவிப் பொறியாளர் திரு S.பாலமுத்துராமன் ஆகியோர் விசாரிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, 819, அண்ணாசாலை, பஸ்ட் ஹோம் அப்ளையன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு S. அழகுவேல்பிள்ளை என்பவர், சென்னை மாநகராட்சி, 5–வது மண்டல (இராயபுரம்) உதவிப் பொறியாளர் திரு S.பாலமுத்துராமன் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்துள்ளார்:-

(1) சென்னை மாநகராட்சி, 65–வது பிரிவு உதவிசெயற் பொறியாளர், 06.02.2017 அன்று தங்களது நிறுவனத்திற்கு வந்து தன்னை அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு தெரிவித்தது :

(2) மூன்று நாட்கள் கழித்து மீண்டும் கடைக்கு வந்து ஏன் தன்னை சந்திக்க வில்லை என்று பொறியாளர் வினவியது :

(3) 13.02.2017 அன்று மீண்டும் வந்து ஏன் தன்னை சந்திக்கவில்லை என்று வினவியதுடன் நிலைமை விபரீதமாகும் என எச்சரித்தது :

(4) 14.02.2017 அன்று கடையில் வைத்திருந்த பேனர்கள் அனைத்தையும் கிழித்தெறிந்தது :

(5) எந்தவொறு அறிவிப்புமின்றி பேனர்களை கிழித்தெறிந்த சட்ட விரோத செயல்.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து முறையீட்டு மனுதாரரிடம் 17.04.2017 நாளன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது திரு முத்துராமன் என்கிற மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் தன்னை 06.02.2017 அன்று சந்தித்ததாகவும், தங்களுடைய கட்டிடத்தின் இரண்டு பகுதிகளில் துணியால் விளம்பரம் செய்யப்பட்ட பதாகைகளை அகற்றுமாறு கோரியதாகவும், நிறுவனத்தின் உரிமையாளர் வெளியூர் சென்றிருந்ததால் மூன்று நாட்கள் கால அவகாசம் கேட்டதாக தெரிவித்தார். மேலும், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் தன்னை அலுவலகத்திற்கு வந்து சந்திக்குமாறு கோரியதற்கு எழுத்துபூர்வமாக எழுதிக்கொடுத்தால் சந்திப்பதாக தெரிவித்ததாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். இந்நிலையில், உதவி செயற்பொறியார் மற்றும் 10 மாநகராட்சிப் பணியாளர்கள் துணிப்பதாகைகளையும் அருகிலிருந்த விளம்பர தட்டிகளையும் அடித்து நொறுக்கி விட்டதாக தெரிவித்தார். தன்னை கவனிக்கவில்லை என்ற காரணத்திற்காகவே எந்தவொரு அறிவிப்புமின்றி பதாகைகள் அகற்றப்பட்டன எனவும் விசாரணையின்போது தெரிவித்தார்.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிர்மனுதாரரான மாநகராட்சி உதவிப்பொறியாளர் திரு S. பாலமுத்துராமன் அவர்களிடம் விளக்கம் கோரிப் பெறப்பட்டது. 18.03.2017 நாளிட்ட தனது விளக்க அறிக்கையில் தான் 06.02.2017 அன்று மேற்படி நிறுவனத்திற்குச் சென்ற போது, அனுமதியில்லாமல் வைக்கப்பட்டிருந்த பதாகைகளை (Banners) அகற்றக்கோரியதாகவும், மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களும் 07.02.2017 அன்று கடைக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகைகளை அகற்ற அறிவுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி பதாகைகளை நிறுவனத்தினர் அகற்றத் தவறிய நிலையில், 13.02.2017 அன்று எச்சரிக்கை ஒன்று அளித்து, 14.02.2017 அன்று பதாகைகள் தன்னாலும் பிற மாநகராட்சி பணியாளர் களாலும் அகற்றப்பட்டன எனவும் தெரிவித்துள்ளார். கடைக்கு பதாகைகள் வைப்பதில் மாநராட்சிக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும், ஆனால் 6x12 அளவிற்கு மேல் இருக்கக்கூடாது என்றும் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட வர்த்தக நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த பதாகைகளை அகற்றிட எழுத்துப்பூர்வமான அறிவிப்பு எதனையும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை என்றும், பதாகைகளை அவர்களே அகற்றாததால், தானும் பிற பணியாளர்களும் அவற்றினை அகற்றும் நிலைமை ஏற்பட்டது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

3. வர்த்தக நிறுவனங்கள் விளம்பரத்திற்காக பதாகைகள் வைப்பது வாடிக்கையான செயல். எனினும், அப்பதாகைகளை மாநகராட்சியின் முன் அனுமதி பெற்று வைக்கப்படவேண்டும். மாநகராட்சியின் முன் அனுமதி பெறாமல் வைக்கப்பட்ட பதாகைகளை அகற்றிட சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிப்பு வழங்கி, அனுமதியற்ற பதாகைகளை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் அகற்றிடுமாறு தெரிவிக்கப்படவேண்டும். காலக்கெடு முடிந்த பின்பும் அகற்றப்படாத பதாகைகளை மாநகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு அகற்றுவதுடன் அச்செலவினத்தை அந்நிறுவனமே ஏற்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் இந்நிகழ்வில் சம்பந்தப்பட்ட பொறியாளரான எதிர் மனுதாரர் திரு பாலமுத்துராமன் விசாரணையின்போது தானே பதாகைகளைக் கிழித்ததாகக் கூறினார். சட்டத்தை தானே கையில் எடுத்துக்கொள்வது

பொதுப்பணியில் உள்ளவர்களுக்கு அழகல்ல. பொதுப்பணியில் உள்ளவர்கள் சட்டத்தை சட்ட வழியில் செயல்படுத்த வேண்டுமேயன்றி, சொந்த விருப்பு வெறுப்புகட்கு தனது பொதுப்பணிகளை உட்படுத்தக்கூடாது. பதாகைகளை தானே முன்னின்று கிழித்தேன் என்ற எதிர் மனுதாரரின் கூற்றை ஆராய்ந்து பார்த்ததில், மனுதாரரை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் வந்து பார்க்க சொல்லியதும் மனுதாரர் பார்க்கத் தவறியதும் ஒரு காரணமாக இருக்குமோ என்ற ஐயப்பாடு நடந்த சூழல்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. உரிய சந்தர்ப்பம் அளித்து, எழுத்துபூர்வமாகத் தெரிவித்து பதாகைகளை அகற்றிட மாநகராட்சிப் பணியாளர்கள் செயல்படவேண்டும் என இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது. மேலும், இந்நேர்வில் எழுத்து பூர்வமான அறிக்கை எதுவும் வழங்கப்படாமல் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பதாகைகளை அகற்றியது சட்ட ரீதியான செயல் அல்ல என்றும், இதுபோன்று சட்டத்திற்கு புறம்பான செயல்களில் எதிர் மனுதாரர் செயல்பட்டது தவறு எனவும் கருதி எச்சரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

22-6-17

22/6/17

பெறுநர்

1. திரு. அழகுவேல் பிள்ளை,
பஸ்ட் ஹோம் அப்ளையன்ஸ்,
819, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

2. திரு பாலமுத்துராமன்,
உதவி செயற்பொறியாளர்,
மண்டலம்–5,
எண்.62, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 21.

3. மண்டல அலுவலர்,
மண்டலம்–5,
எண்.62, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 21.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்